**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 18** |
| **Name** | : | **திரு. சகாயராஜ்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.01.2026**

எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். எதிரி-4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து, பணி நிறைவு பெற்றுவிட்டேன். நான் மதுரை ஜெய்ஹிந்துபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்த போது, கடந்த 28.09.20216ம் தேதி 21.00 மணிக்கு நிலைய காவல் அலுவலில் இருந்த போது, மதுரை ஜெய்ஹிந்துபுரம் NSK வீதி, கதவு எண்.237, புலிப்பாண்டி கோவில் தெருவைச் சேர்ந்த பாண்டிச்செல்வம் என்பவர் மனைவி ருக்குமணி, வயது 46 என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று, ஜெய்ஹிந்துபுரம் நிலைய குற்ற எண். 1391/2016 பிரிவு Woman missing ஆக வழக்கு பதிவு செய்தேன். அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து மதுரை நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்தேன். எங்கள் வழக்கு கேப்பில் உள்ள முதல் தகவல் அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன். **ஜெய்ஹிந்துபுரம் காவல் நிலைய குற்ற எண்.1391/2016 முதல் தகவல் அறிக்கை நகல் அதசாஆ.21 ஆகும்.** மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கின் ஒரு நகலை ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

விஜயலெட்சுமி காணாமல் போனதாகச் சொல்லப்படும் நாளில் இருந்து 5 நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் காலம் 7,8 ஆகியவை நிறப்பப்படவில்லை என்றால் சரிதான். ஜெய்கிந்துபுரம் காவல் நிலையம் காவல் ஆணையர் கட்டுப்பாட்டிலும், சாப்டுர் காவல் நிலையம் காவல் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டிலும் செயல்படும் என்றால் சரிதான். நான் வழக்கு பதிவு செய்த ஒரு வருடம் கழித்து தான் சாப்டுர் காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றால் சரிதான். ஒரு வழக்கை மற்றொரு காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்ய, உயர் அதிகாரிகளின் எழுத்துப் பூர்வமான உத்தரவு பெற வேண்டும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை